**செய்தி வெளியீடு எண்: 613** **நாள்: 03.09.2018**

# <u>பத்திரிகை செய்தி</u>

03.09.2018–ஆம் நாளன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய கூட்ட அரங்கில் நடந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி. கருப்பணன், அவர்கள் பொறியாளர் மற்றும் அமைச்சுப்பணியாளர்கள் உள்ளிட்ட 47 நபர்களுக்கு பதவி உயர்வு ஆணை வழங்கியும் மற்றும் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கியும் சிறப்பித்தார்கள்.

மேலும் மண்டல, மாவட்ட அலுவலகங்களின் செயல் திறன் குறித்த ஆய்வு மேற்கொண்டு வாரியம் செவ்வனே செயல்பட அறிவுரை மற்றும் ஆலோசனை வழங்கினார்கள்.

இவ்விழாவில் அரசு முதன்மை செயலர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை & தலைவர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திரு ஷம்பு கல்லோலிக்கர், இ.ஆ.ப, அவர்கள், உறுப்பினர் செயலர் திரு. து சேகர் அவர்கள் மற்றும் வாரிய உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**